விலை 0—1—3 ஆண்டுச்சந்தாரூபா

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிட நாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 2—2—47 | இதழ் 38



## ஆப்பிரிக்க மனு
### ஸ்மட்ஸ்

தென் ஆப்பிரிக்காவிலே, 'மனு அவதாரம்' எடுத்துள்ள ஜெனரல் ஸ்மட்ஸ் துரை இவர்தான்!

இந்தியாவிலிருந்து வந்துள்ளவர்களைத் தீண்டாதார் நிலைக்குக் கொண்டுவரத் திட்டம் செய்தவர். பல நாடுகளின் கழகத்திலே, இவருடைய செயல் எள்ளி நகையாடப்பட்டுக் கண்டிக்கப்பட்டது. இப்போது இவர், அந்தச் சங்கத்தையே குறை கூற ஆரம்பித்திருக்கிறார். இவருடைய ஜாதி அகம்பாவத்தைக் கண்டிக்காத அறிஞர் கிடையாது. இவ்வளவு கண்டனத்தையும் பெற்றுக் கொண்டும் இந்தக் கிழவர் தன் போக்கை மாற்றிக் கொள்ள மறுப்பதுடன், கருப்பரால் வெள்ளையருக்கு வர இருக்கும் ஆபத்தைத் தடுக்கும் முன்னேற்பாடு தன் திட்டம் என்று வாதாடுகிறார். இன்று உலக அறிஞர்களின் கண்டனத்தைப் பெற்றுள்ள இந்த ஸ்மட்ஸ், போல, நம் நாட்டிலே ஆயிரமாயிரம் மனுதர்மவான்கள் உள்ளனர். ஜாதிக் கொடுமையை நிலைநாட்டியே பிழைக்க வேண்டுமென்று கருதும் இந்தச் சுதேச ஸ்மட்சுகளைக் கண்டிக்க 'சுயஜாதி'ப் பற்று இடந்தராததால், இங்கு மித்திரனும் இந்துவும் பிற பார்ப்பனஏடுகளும், உள்நாட்டுக் கொடுமைபற்றி இருட்டடிப்புச் செய்கின்றன.

ஜாதிக் கொடுமையின் எண்ணற்ற கோர விளைவுகளிலே ஒன்றினை,த் தோழர் உருத்திரமணி என்பவர், கவிதையாகத் தீட்டியுள்ளார், அந்தியில் நடந்தது எனும் தலைப்புடன். பக்கத்திலே உளது, காண்க.

# 'அந்தியில் நடந்தது!'

'தாகம் அதிகம்; தண்ணீர் சற்றுக்
கொண்டுவா!' என்றான் குப்பன்; அவன்றன்
மனைவி சுப்பி செம்பினை யெடுத்துப்
பானையில் மொண்டு பரிவுடன் அணுகிக்
கையினை நீட்டக் கண்டு சினந்து
'தூசியுந் தும்புந் தொலையா அழுக்கும்
நிறைந்து விளங்கும் நீரிது வேண்டாம்!
வாயோ உலருது; விரைவில் வேறு
தெளிந்த நீரொரு துளியே யாகிலும்
கொண்டு வந்து கொடுப்பாய், சுப்பி'
என்றதும் போர்வையை எடுத்துப் போர்த்து
நொடியில் கொணர்வேன் நீரினை யென்று
சிறுகுடம் ஏந்திச் சேரியை விட்டுச்
சென்றாள் அந்தி விண்மீ னொளியில்!
* * * *
காய்ச்சலின் கடுமையால் கனலாய்க் கிடக்கிறான்!
மூன்று நாளும் மூனகி யிருந்தான்!
இன்று காலை இதமாய்ப் பேசக்
கஞ்சியை ஒருவாய் குடித்து விழித்தான்!
மதியம் கஞ்சியை மறுத்து விட்டான்!
மாலையில் ஏனோ மேனி வாடிற்று!
தாகக் கொடுமையால் தவித்திருக் கின்றான்!
யாரோ ஊரின் எல்லை கடந்து
இரண்டு கல்லும் எடுத்தடி வைத்து
நடந்து திரும்ப நாழியும் இல்லை!
திருக்குளம அரைக்கல் தூரம் இருக்கும்!
ஆனால் அதுவோ அந்தணர் தமக்கே
உரிமை! அதனால் பெருமை யவர்க்காம்!
எனினுந் திருட்டுத் தனமாய்ச் சுப்பி
தண்ணீர் கொணரத் துணிந்து விரைந்தாள்!
* * * *
சாலை யோரச் சற்று மரத்தடி
நின்று, பிறகு நடப்பாள்! ஏனெனில்
அக்கிர காரம் அந்தணர் இருப்பிடம்!
தாழ்த்தப் பட்டோர் தவறியும் சென்றால்
தண்டனை மட்டும் தவற மாட்டாது!
பஞ்சாங் கதுப் பார்ப்பனர் தாமே
பஞ்சா யத்தார்! பரிவு ஏது!
நெடுவழி செல்லும் நடையைத் தவிர்த்து
அஞ்சி நடுவழி அகற்றிப் பாதையின்
ஓரம் பற்றி ஒளிந்து கடந்தாள்!
* * *
ஊருள் உரிமை உடைய பார்ப்பார்
மூவர் ஏதோ மொழிந்த வண்ணம்
குளத்தை நாடிக் கடுகிச் சென்றார்!
பார்ப்பனர், மாதைப் பார்க்கவு மில்லை!
அவரோ நீரை யள்ளிக் குடித்துக்
கரையைச் சேர்ந்ததும் கதையைத் துவக்கிப்
பேசவும், சுப்பி பொறுமை யிழந்தாள்!
சாந்தத் துடனே சந்தடி யின்றி
இருந்தாள், நின்று இருந்தாள்! பின்னர்
அவசரப் பட்டால் ஆகுமோ காரியம்?
* * *

8-ம் பக்கம் பார்க்க

4-ம் பக்கத் தொடர்ச்சி

டுப் போனேன், என்னுகோவம் வந்தது தெரியும. ஜெமீன்தாரும்ஞு. சாக்கிட்டு சாக்கிட்டு ஏசனுரு. பயல்கள் தலைகால் தெரியாமே ஆடுறாக அந்தஸ்த்து தெரியாமே ஆடுறாக. அட்டகாசத்தை எல்லாம் தொலைச்சுப் போடம்றனு ம்காக்கரிச்சாரு."

"ஏன்?"

"ஏனு? நம்ம கோட்டைப்பாத்துத்தான்."

"கோட்டுமேலே என்ன கோவம்?"

"அட, யார்டா அவன் முட்டாளா இருக்கே. ஜெமீன்தாரு அன்னக்கிப் போட்டாந்த கோட்டு நான்போட்டுக்கிட்டுப் போனதுபோல இருந்தது"

"இருந்தா என்ன?"

'இருந்தா என்னவா? நாம்ப ஜெமீன்தாரு, நாமும் பட்டு கோட்போடுவது, நம்மகிட்ட அடங்கிக்கிடக்கிறபய, இவனும் அதேபோலக்கோட்போடுவதா என்கிற கோபம்"

"அதுவா? புரிஞ்சுது, புரிஞ்சுது."

"வாத்தி, என்ன, உள்ளேகூவிகிட்டு இடக்கிறுன்.

(9)

இடம்:- வாத்தியார் வீட்டுக்குள்
இருப்போர்:-வாத்தியார், ஜெமீன்குடி

"வாங்க, வாங்க."

'என்னத்தை வாங்க. என்னய்யாநீ, இங்கிதம் தெரியாமே இருக்கிறே."

'ஏன், என்ன பேசறிங்க?"

'என்னய்யா இது, கூட்டம் கூடிப்போச்சு. எப்பவரவேண்டிய ஆள், நீ."

"பத்துமணிக்குத்தானே கூட்டம்?

"என்வா காணறே. எட்டு மணிக்குக் கூட்டம், மணி ஒன்பது ஆகுது, நீ இங்கே, கல்லுப் பிள்ளையார் போல உட்கார்ந்திருக்கறயே, எழுந்திரு, எழுந்திரு."

"அடாராமா! தெரியாமேப் போச்சே. டே! சுண்டு, தலை குட்டெ எடுடா, ஓடுடா, மன்னிக்கணும், அடடா! ஜெமீன்தார் வந்துட்டாரோ"

"உன் நல்லகாலம், இன்னும் அவரும் வாலே, டிப்ட்டியும்வரவில்லெ. புறப்படுங்க. பாட்டு, ரெடியாச்சா"

"டே! பாடுடா."

"வேணும், வேணும், அங்கெயே வந்து பாடட்டும். புறப்படு."

(10)

இடம்:-ஜெமீன்வீட்டுக்கூடம்,
இருப்போர்:-ஜெமீன்தார். கூட்ட அமைப்பாளர் ஐயர். பணியாட்கள்.

"டேய்! வண்டிபோடு. யாரு இது? ஓ! மீட்டிங்கு ஆசாமியா? என்யா! என்ன, மீட்டிங்கு இருக்கா?',

"இருக்குங்க............ரொம்ப நேரமா..........."

"ரொம்ப நேரமாகுமா....?"

"இல்லிங்க. நீங்க சொல்றபடி நடத்திவிடலாமுங்க. கூட்டம் கூடி ரொம்ப நேரமாச்சின்னு தெரிவிச்சிக்கிட்டேன்."

"ஆமாம், இந்தப்பயக, கூட்டம் கூடுதுன்னு, இப்படித்தான், ரொம்ப முன்னதாக வந்துவிடுவானுங்க. டிப்டி, இப்பத்தான் காப்பி சாப்பிட்டிருப்பார். அடடெ! மறந்துட்டேன். டே! தடியா! காப்பிஎங்கேடா? எண்டா! அறிவில்லே, மரமா நிற்கறயே, காப்பி வந்திருக்குன்னு சொல்லப்படாதோ"

"சொன்னேனுங்க."

"திமிரெப்பாரு. இவன்சொன்னனும். ஏண்டா, அப்ப நான் என்ன செவிடனு?"

"இல்லிங்க........"

"அப்ப, நீபேசியிருந்தா எனக்குக் கேட்காமலா இருக்கும்?"

"கேட்கும்ங்க"

"பொய்தானே பேசினே."

"ஆமாங்க........"

'போடுடாதோப்புக்கரணம்.' 108. காப்பியைக் கொடு."

11

இடம் :—வாசற்படி.
இருப்போர் :— வண்டி ஓட்டி, ஐயர்.

"சாமி! பில்லெ, பூட்டவா, செவிலியா?"

"அவர், எதெடா பூட்டச் சொன்னர்?"

"ஒண்ணும் சொல்லலிங்க."

"கேட்டுச் செய்"

"அவரைங்களா?"

"தொவலையே. இந்த மாதிரிச் சமயத்திலே, சாமி சாமின்னு கொஞ்சறது. ஒருவேலெ வெட்டி செய்யச் சொன்னு, எவ்வளவு திமிருடா உனக்கு. படு, இப்பெ"

"சாமி! தப்பு செய்திருந்தா மன்னிச்சுப்பூடுங்க. ஐயா வர்ர நேரமாவுது. பில்லெயெ பூட்டவா, செவிலியா சொல்லுங்க சாமி"

"செவிலியை பூட்டுடா முட்டாள். ஆவட்டும்டா. உள்ளே கூப்பிடுரர் என்னே. சீக்கிரம் பூட்டி ரெடியாகட்டும்."

12

இடம் :—உள்ளே.
இருப்போர் :—ஜெமீன்தார். ஐயர்.

"கூப்பிட்டேளா?"

"ஆமாம். கணக்கு ரூமுக்கு போய் இருய்யா, வர்ரேன்."

"சரிங்க"

டே! சோமு! போய், சகுனம் பாருடா. நல்ல சகுனமாகச்சே வந்து சொல்லு. இருய்யா, கணக்குரூம்போயிட்டுவாரேன்.

13

இடம் :—கணக்கு அறை.
இருப்போர் :—ஜெமீன்தார். ஐயர்.

"ஏய்யா! நான் ஏதாவதுபேசணுமா, கூட்டத்திலெ"

"ஆமாம், எல்லோரும் எதிர் பார்த்துண்டேன்னு இருப்பா."

"ஏன், நான் பேசாது போருதோ"

"பேஷாப் போதும். நீங்க விஜயம் செய்யறதே பெரிய கௌரவமன்னு! ஆனு, இந்த காலத்திலே, ஏதாவதுகொஞ்சம் பேசணும்னுசொல்வா. அப்படி ஒரு பழக்கமாயிண்டு இருக்கு"

"என்ன பழக்கமோ, எழவெடுத்தபழக்கம். என்னத்தைப் பேசணும்"

"பொதுவா நாலு வார்த்தெ. என்னே இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கச் சொன்னதற்காக, நான் சந்தோஷப் படறேன்னு,........"

'ஏன்யா! ரொம்ப அழகா இருக்கு உன் யோசனே. நான் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கிறதுக்காக, அந்த ஜனங்க சந்தோஷப்பட வேணுமா, நான் சந்தோஷப் படணுமா. சுத்தப் பைத்யக்காரன். நீ போய், உன் மகன் இருக்கானே, கூட்டிக் கொண்டு ஓடிவா. அவன்பிரசங்கம் செய்யறுனுமே."

"அது சுத்த அதிகப் பிரசங்கியாச்சே. என்னமோ இவன்தான் சுயராஜ்யத்தைத் தாவிப் பிடிப்பவனுட்டமா பேசுபவன். காங்கிரசாம் அவன். ஏதேதோ பேசருன்."

"அவன் ஏதாவது பேசட்டும் எனக்கு வேண்டியதா இரண்டு வரி எழுதிவிட்டா, நான் படித்துவிடறேன்"

"சரி. இதோ போய் நான் அழைச்சுண்டு வர்ரேன்."

"அழைச்சிகிட்டு ஏன்யா வரணும். எழுதி எடுத்துக்கிட்டே வந்துவிடு. எதற்கும் அவனே கூட்டத்துக்கும் வரச்சொல்லு. சீக்கிரமா போய், காரியத்தை முடிச்சுக்கொண்டு, ரங்கவிலாசுக்கு வந்து சேர். நான் அங்கே இருக்கேன்.

14

இடம்:- ரங்கவிலாஸ்
இருப்போர்:- ரங்கவிலாஸ் ஜெமீன்தாரணி. வேலைக்காரி.

"எம்மா, ஒவல்டின் போட்டடுங்களா?"

"போடு. ஏண்டி, சிவப்பி, அவரு காலையிலே எழுந்துபோய் விட்டாரா?"

"ஆமாங்க"

"எங்கெ இருக்காரு. ஷெட்டிலேயா?"

"அங்கெத்தான்"

"காப்பி கொடுக்கல்லே?"

"கொடுத்தேனுங்க."

"சரி! அவர் வீட்டிலே, அவர் சம்சாரம் வந்திருக்காளாமே, ஒரு பத்துபடி பச்சரிசியும், கொஞ்சம் வெல்லமும் கேட்டாளாம், கொடுத்தனுப்பு. மறக்காமே அனுப்புடி. என்னடி அது, வண்டிச்சத்தம்கேட்குது. அண்ணன்வருதா?"

"ஆமாம். ஜெமீன்தாரய்யாத்தான்"

"வாண்ணு! என்ன இது இவ்வளவு காலையிலே, எழுந்திரிச்சிட்டே.,,

"என்னம்மா செய்கிறது! ஒவ்வொருவேலையா வந்து குவியுது."

"போண்ணேன்! ஊர் வேலையை நீ தலைமேலே எடுத்துப் போட்டுக்கிட்டு அலையறே. ஏன் வீண் அலைச்சல்!!"

"அப்படிச் சொன்னு ஆகுமா? இங்கே எதுநடந்தாலும், நம்மைக்கொண்டு தான் நடத்த வேணும். அதுதானேமுறை."

"சிவப்பி! அண்ணனுக்குஓவல்டின் கொடுடி"

"சிவப்பி, இங்கெத்தான் இருக்காளா? ஊருக்குப் போயிருந்ததா சொன்னுங்களே"

"ஆமாம், அவபுருஷன்வந்து, தவமாத்தவங்கிடந்து அழைச்சிகிட்டுப்போனுன். போனபத்தாம் நாள் உன்னோடு இருக்க முடியாது போடான்னு சொல்லிட்டு வந்துவிட்டா."

"இலேசுப்பட்டவளா சிவப்பி."

"இப்ப, எங்க அண்ணெ, புறப்பட்டே?"

"ஒரு மீட்டிங்கு. டிப்ட்டி வருகிறுன். அவன், ஆறுமாசமா கெஞ்சிக்கிட்டே இருக்கறுன், ஒருநாளைக்கு நான் தலைமைவகிச்சிக்கூட்டம் நடத்த வேணும்னு. அப்போது தான் அவனுக்கு உத்யோகம்கூட உயருமாம். கௌரவமாம்."

"என்னமீட்ட்டிங்கோ, போய் சுருக்காவந்துடு அண்ணென். இன்னக்கி இங்கெயே சாப்பிடு. அண்ணி கூடத்தான் ஊருக்குப் போயிருக்கே"

"சிவப்பிதானே சமயல்?"

"ஆமாம் — சொல்லேண்டி சிவப்பி—"

"என்னத்தைச் சொல்லவாம்!',

"வாங்க சாப்பாட்டுக்குன்னு சொல்லு."

"வராமேப்போவாரா? அம்மா! அதுயாரோ வருகிறுப்போலே இருக்கு."

"ஆமாம், அந்த பார்ப்பானே, இங்கே வரச்சொல்லியிருந்தேன் சிவப்பி! அவன் ஒருகடுதாசி கொடுப்பான் அதை எடுத்துவா இங்கே. அவனே, கூட்டத்துக்குப்போய் இருக்கச் சொல்லு."

(15)

இடம்:- ரங்கவிலாஸ்
இருப்போர்:- வெளிவாசல் மோட்டார்டிரைவர். ஐயர்.

"எம்பா, சந்திரா! மோட்டார், ரிப்பேர் ஆகவில்லையோ இன்னும்"

"அதென்ன ஐயர்! என்னைக் கேட்கிறிங்க.?"

"என்னடா இது! நீதானே இங்கு மோட்டார் டிரைவர்? உனக்குத்தானேதெரியவேணும் அந்த விவகாரம்?"

"மோட்டார் டிரைவர்! சம்பளம் கொடுத்து வருகிற அம்மாக்கூட, இவ்வளவு விளக்கமாச் சொல்லமாட்டாங்கபோலிருக்கு?"

"என்னடா இது, காலங்காத்தாலே, கோபமாயிருக்கயோ? எனக்குத்தெரியாது. கோவிச்சுக்காதே. நான் வேடிக்கையாக் கேட்டேன். நேக்கு தெரியாதா, உன்குணம். நல்லமனஷனுச்சே. மேலும் அதிர்ஷ்டக்காரன்"

"பார்த்திங்களா! கேலிபேச ஆரம்பிச்சி விட்டிங்களே, என்னமோ, ஜெமீனம்மா, என்னைத் தம்பிபோல ஆசையா நடத்தறதைப் பார்த்து ரொம்பப்பேர் தப்பாத்தான் எண்ணுகிருங்க—"

"சந்திரா! தம்பிபோலவானு நடத்தட்டும் அண்ணனுட்டமான்னு நடத்தட்டும், ஆசையா

6-ம் பக்கம் பார்க்க

# திராவிட நாடு

காஞ்சி] 2—2—47 [ஞாயிறு

## அவரால் முடிந்தது!

★

இன்று நடுநிசியிலிருந்து அவசரச்சட்டம் அமுலுக்கு வருகிறது என்று சென்னை சர்க்கார், தெரிவித்ததும், பகலிலேயே நடுநிசி நிலைமை ஏற்பட்டுவிட்டது—கப்சிப்—கேள்வி கேட்பவர், குறை கூறுபவர், கண்டிப்பவர் யாரும் கிடையாது. அவசரச் சட்டம் என்ற உடனே ஆர்ப்பரிக்கும் 'பிரஜா உரிமைப்'பாதுகாப்பு வீரர்கள், கண்மூடி மௌனியாகிவிட்டனர். "நமக்கேன் வீண்வம்பு! என்னமோ நடக்கிறது; இவர்களுக்கு வேண்டும்; நாம் சொன்னால் கேட்கவா போகிறார்கள்" என்ற மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

எதிர்பாராதது நடைபெற்றால் திகைப்பு ஏற்படுவது சகஜம்! எதிர்பாராத சமயத்திலே, எதிர்பாராத இடத்திலிருந்து, எதிர்பாராதது நடைபெற்றால், திகைப்பு உச்சநிலைதானே அடையும். காங்கிரசைப், 'பொதுமக்களின் உரிமைக்கான கழகமென்றும், பேச்சுச்சுதந்திரம் எழுத்துச்சுதந்திரம் ஆகியவற்றினுக்காகப்போராடும் படைஎன்றும், ஏகாதிபத்ய முறைகளை எதிர்க்கும் கட்டி முனை என்றும், எண்ணிவந்த மக்கள் காங்கிரஸ் ஆட்சியிலே, கவர்னர்களுக்கு, ஏகாதிபத்ய உத்தியோகஸ்தர்களுக்கு, ஏகாதிபத்யத்துக்குச் சாமரம் வீசும் முதலாளிமார்களுக்கு, இவர் போன்றோருக்கெல்லாம், 'கெடுபிடி' இருக்கும் இவர்களின் அதிகாரம் அமுல் ஆகியவைகள் அடக்கப்படும், என்று எண்ணினர்.

"கவர்னர் இது செய்தாக வேண்டும்என்று கூறினர். காங்கிரஸ் மந்திரி அவ்விதம் செய்ய முடியாது என்றார். கவர்னர் தமது விசேஷ அதிகாரத்தைஉபயோகிக்கப் போவதாகக் கூறினார். இந்த மிரட்டலுக்குமக்கள் சர்க்கார் நடத்தும் நான் பயப்படமாட்டேன் என்று மந்திரி சொன்னார். கவர்னர் கோபத்துடன் கூவினார். காங்கிரஸ் மந்திரி, கவர்னரை, அவருடைய மாளிகையிலேயே சிறை வைத்திருக்கும்படி உத்திரவிட்டார்!"

இப்படிப்பட்ட திடுக்கிடும் சம்பவங்களெல்லாம் நடைபெறும், என்று மக்கள் எதிர்பார்த்தனர்—டீக்கடைகளிலே, ஒவ்வோர் காங்கிரஸ் கர்ஜனைக்குப்பிறகும் இதுபோலத்தான் மக்கள் பேசிக்கொண்டனர். ஆழப்பதிந்துள்ள இந்த எண்ணம், காங்கிரஸ் பிரசாரத்தின் விளைவுதான். அப்படிப்பட்ட காங்கிரஸ் ஆட்சியின்போது, ஏகாதிபத்யமும் அதன் ஆதீனத்தில் உள்ள அதிகாரவர்க்கமும், என்றும்போல் இன்றும் ஆட்சிசெய்யக்கண்டே, மக்கள் திகைத்தனர். இந்தத் திகைப்பு ஏற்பட்ட உடனே, மூலைக்குமூலை காங்கிரஸ்பிரசாரகர்கள் சென்று, "இது எங்கள் ஆட்சி! இனி ஏகாதிபத்யத்துக்கு இடம் இல்லை! அதிகாரவர்க்கத்தின் கொட்டத்தை அடக்கியே தீருவோம். பாருங்கள் இனிநடக்கப்போகிற வேடிக்கையை! ஆகஸ்ட்டு இயக்கத்தின்போது, தேசபக்தர்களை துன்புறுத்திய அதிகாரிகளை எல்லாம், பிடித்து, கூண்டில் நிறுத்தி, விசாரணை நடத்தி, தக்கதண்டனை தரப்போகிறோம்" என்றெல்லாம் வீரதீரமாகப் பேசினர். பொது மக்கள், "ஆஹா! இதன்றோவீரம்! இந்தத் தைரியம் காங்கிரசாருக்குத் தவிர வேறு யாருக்கு ஏற்பட முடியும்!" என்று பெருமையுடனும் பூரிப்புடனும் கூறினர்.

மேடைப்பேச்சுக்கும் மந்திரி சபையின் நடவடிக்கைகளுக்கும், பொருத்தமோ தொடர்போ இல்லை என்பது பொது மக்களுக்குப்புரியகொஞ்சநாளாயிற்று திகைப்பு வலுத்தது.

ஒழியட்டும். ஏகாதிபத்திய அதிகாரிகளை தண்டிக்கவோ கண்டிக்கவோ தயங்கினதோடு இருந்துவிட்டாலும், திகைப்பு வளராது. காங்கிரஸ் ஆட்சியினர் அந்த நிலையிலே நிற்கவில்லை. ஏகாதிபத்யம் தயாரித்த பழைய பாடபுத்தகத்தைத்தான், தனக்கும் வழிகாட்டியாகக் கொண்டது.

"கூட்டம் போடுகிறார்கள்—என்ன செய்வது?" கேள்வி.

"C.I.D யை அனுப்பு. பதில்.

"கூட்டம் வலுவடைகிறது. என்ன செய்ய?" கேள்வி.

"யாரார், இதற்கு மூலகாரணம் என்று கேட்டுத் தெரிந்துகொள்"—பதில்

"பட்டி தயாராகிவிட்டது. மேற்கொண்டு என்னசெய்ய?" கேள்வி.

"144-தடைஉத்திரவுபோடு." பதில்.

"மீறினால் என்ன செய்ய?" கேள்வி.

"கூட்டத்தைக்கலை." பதில்.

"கலையமறுத்தால்?" கேள்வி

"தடியடி கொடு." பதில்.

"அதனால் பயன் ஏற்படாவிட்டால்?" கேள்வி.

"கண்ணீர்ப்புகை குண்டு வீசு!" பதில்.

"அதுவும் போதவில்லை என்றால்?" கேள்வி.

"துப்பாக்கிப் பிரயோகம் செய்." பதில்.

இது ஏகாதிபத்யபாலபாடம்! இதனை நன்றாகப்படித்து, முதல் தரமான பரிசுவாங்குமளவுக்குக் காங்கிரஸ் மந்திரிசபை வேலை செய்து வருகிறது.

மக்களின் மனதிலே திகைப்பு ஏற்படாமலிருக்கமுடியுமா? சாதாரணச்சட்டங்களின்துணைகொண்டு கிளர்ச்சிகளை அடக்க முடியாவிட்டாலோ, நேரம் போதாவிட்டாலோ, அவசரச் சட்டம் பிறப்பிக்கும், ஏகாதிபத்யம். இது பாலபாடத்துக்கு, அடுத்தவகுப்புப்புத்தகம். இன்று காங்கிரஸ் மந்திரிசபை, இந்தப் பாடத்திலும தேறிவிட்டது, அவசரச்சட்டம் பிறப்பிக்கும் அளவுக்கு, ஏகாதிபத்ய பாடம் படித்துவிட்டனர். அதனைக்கண்டும், கண்டிக்கும் தைரியம் இல்லாத அளவு, பொதுமக்களின் வீரம் குன்றிவிட்டது. அம்மட்டோ! மக்களுக்கு மாண்புள்ள கருத்துகளை வழங்கும் மகத்தானசெயலாற்றும் பத்திரிகாசிரியர்கள் அடக்குமுறையை எதிர்க்கும்வீரர்கள், புரட்சிபாவத்தை விதைத்த பேனாவீரர்கள், இன்று, அவசரச்சட்டத்தின் அவசியம்பற்றியும், அதனைச் 'சர்வஜாக்ரதை'யாக உபயோகிக்கவேண்டிய சூட்சமத்தையும், முன்னாள் அவசரச்சட்டத்துக்கும் இன்னாள் அவசரச்சட்டத்துக்கும் உள்ள அடிப்படை வித்யாச விளக்கத்தையும், மிக மிக நிதானமாக, மனதிலே துளி பரிவு பாசம் அற்று, உரிமை உணர்ச்சியற்று, ஊர் நலனைப் பற்றிய அக்கரையற்று, எழுதுகிறார்கள்!

"காராக்கிரகத்திலே நாங்கள்தள்ளப்பட்டு ஏகாந்தமாக இருந்த போதெல்லாம் இந்தச் சட்டமற்ற சட்டம் நமது தேசத்திலே இனிஒரு போதும் இருக்கக்கூடாது; நமது கொடிய விரோதிகள்மீதும் இந்த அவசரச்சட்டத்தைப் பிரயோகிக்கக்கூடாது என்று எண்ணி இறைவனைப்பிரார்த்தித்தோம். சுதந்திர தேவியைப்பூஜை செய்யும்போது மக்களின் சுதந்திரத்தையே பலிகொடுக்கிறோமே இது சரியா? இதே விதமான நிலைமையிலே இங்கிலாந்திலே இப்படிப்பட்ட அவசரச் சட்டம் பிறப்பிப்பார்களா?

இரண்டாண்டுகளுக்கு முன்பு அன்னியஅதிகாரவர்க்க ஆட்சிதான் நிலைப்பதே கஷ்டம் என்றநிலைமையிலே இதுபோன்ற அவசரச்சட்டத்தைப் பிரயோகித்தபோது நாம் எவ்வளவு வன்மையாக அதனைக் கண்டித்தோம் என்பதை மறக்க முடியுமா?"

என்று ஒரே ஒரு குரல் கேட்கப்படுகிறது. தனது பேத்திமருமகனைப்போலீசார் கைதுசெய்ததைக்கண்ட, மாஜி மந்திரி டாக்டர் ராஜனுடைய குரல் அல்ல! தன்மகனுடைய மனதை இந்த அவசரச்சட்டம் எவ்வளவு வேதனைப்படுத்தியிருக்கும்என்று பதறவேண்டிய டாக்டர் சுப்பராயனின் குரல் அல்ல! மதுரை வக்கீலும் சட்டசபை அங்கத்தினருமான தோழர் A. வைத்தியநாதஐயருடைய குரல்! ஒரே ஒரு கண்டனக்குரல், நிசப்தத்தின் இடையே! ஒரே ஒருமின்வெட்டு கார் மேகத்திடையே! ஒரே ஒரு நீரோடை, பாலைவனத்திடையே! ஒரே ஒரு வீரபுருஷன், என்ன செய்வது நாம் கட்சியாச்சே! என்றெண்ணி வாய் மூடிக்கிடக்கும் காங்கிரசாருக்கிடையே. நாம் தோழர் வைத்தியநாத ஐயரைப் பாராட்டுகிறோம்! உண்மையாகவே! ஆரிய வைத்திய நாதஐயரையா திராவிடநாடு பாராட்டுவது என்று ஐயம் ஏற்படும். சகஜம். ஆனால் நாம் பாராட்டுவது ஆரிய வைத்தியநாதஐயரின் ஆண்மையை. சட்டசபையிலே அங்கம் வகிக்க ஒரு கட்சியின் சட்டை தேவைப்படலாம். அது கிடைத்துவிட்டது என்பதற்காக, கட்டுப்பாட்டின் பேராலோ, சொந்தக்கட்சியை எங்ஙனம் குறைகூறுவது என்ற போக்காலோ, உரிமை காலடியில் போட்டு மிதிக்கப்படும் போது, வாய்மூடி இருப்பதும், தலையசைத்துச் சம்மதம் தெரிவிப்பதும், உடந்தையாக இருப்பதும், சட்டபுத்தகங்களிலே குற்றங்கள் என்று பொறித்திருக்கப் பட்டிரா, ஆனாலும், நீதிநேர்மை மனிதத்தன்மை ஆகிய மாண்புகளின்உறைவிடமாக, எந்தமனச்சாட்சி மகத்தான சட்டபுத்தகமாக இருக்கிறதோ, அதிலே, இப்போக்கு மிக மிகக் கேவலமான குற்றம் என்றே பொறிக்கப்பட்டிருக்கும். தோழர் வைத்தியநாதஐயர், இந்த மனச்சாட்சியைப் பெரிதென மதித்தமைக்கு, நமது நன்றியும் பாராட்டுதலும்.

கம்யூனிஸ்டுகளை, தடம்புரண்டு உள்ளவர்கள் அடக்கப்படவேண்டிய கட்சி என்று கருதுகிறார்கள் காங்கிரசார், எனவே அந்த நோக்கத்துக்காக, இந்த கைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி இருக்கிறது என்று சிலர் வாதாடக் கேட்கிறோம். இது மிக கீழ்த்தரமான வாதமல்லவா என்றுயோசிக்கும் படிக் கேட்டுக்கொள்கிறோம்.

காங்கிரசின்—காங்கிரஸ் மந்திரி சபையின் போக்கினைக் — கண்டிக்கும்,—எதிர்க்கட்சியாக இருக்கும், நிலை, தென்னாட்டிலே திராவிடத்திலே — யாராருக்கு உண்டெனில், லீக், திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றினுக்கு — பச்சை—கருப்பு—சிகப்பு. இம்மூன்றும் சேர்ந்து—திட்டமிட்டு வேலை செய்தால்கூட, உள்ள பிரச்சார பலம் எவ்வளவு, காங்கிரசுக்கு உள்ள பிரச்சார பலமும் வசதியும் எவ்வளவு! இது மிகச் சாமான்யக்கணக்கு — சிரமமின்றிப்புரிந்துகொள்ளக் கூடிய கணக்கு. இம்மூன்று கட்சிகளுக்கு, இந்து இல்லை, மித்திரன் இல்லை, தினமணி இல்லை, தினசரி இல்லை, [illegible] இல்லை, [illegible] பிரன் இல்லை, விகடன் இல்லை, கல்கி இல்லை, [illegible] இல்லை, [illegible] குறிப்பிட நமக்கு இங்கு காகிதத்தில் இடம் இல்லை! இவ்வளவு ஏடுகளும், காங்கிரசை ஆதரிக்க உள்ளன. இவைகளிலே [illegible] வாகும் [illegible] [illegible] அளவுகூட [illegible] எதிர்க்கட்சியேடுகளுக்காகவென்[illegible] அளவு! எனினும், எதிர்க்கட்சிகளின் கொள்கைகளுக்கு நாட்டிலே இடம் இருக்கிறது[illegible] வளருகிறது, [illegible]

(7-ம் பக்கம் [illegible])

நாட்டில் நடப்பது!

# யார் கேட்கமுடியும்?

[தனிப்பட்ட யாரையும் குறிப்பிட்டதல்ல; நிலைமை விளக்கம், இந்த நாடகம்; நாடகமேடையிலே நீங்கள் கண்டிருக்கமுடியாது, ஆனால் நாட்டில் நடக்கிறது. எங்கே? இடம், ஒன்ரு, இரண்டா சொல்ல!

இடம், ஒரு ஜெமீன், எந்த ஜெமீனை இருந்தால் என்ன, குறிப்பிட்ட எந்த ஜெமீன்மீதும் குறை கூறுவதல்ல நமது நோக்கம். நிலைமை விளக்கமே நோக்கம்.

இருப்போர், ஜெமீன்தார், ஜெமீன் ஐயர், ஜெமீன் மானேஜர், ஜெமீன் சமையலாள், எடுபிடி, வேலையாள், வண்டிஓட்டி, ஜெமீன்குடிகள், ஜெமீன்வட்டத்தில் வேலை பார்க்கும் அதிகாரி முதலானோர்.

காலம், இன்றும் நடப்பதுதான்.

நடப்பது என்ன? ஒரே வார்த்தை வேண்டுமானால், நடப்பது, தர்பார் என்று கூறிவிடலாம். இரண்டு வார்த்தைகள் தேவையா? காட்டு ராஜாங்கம்!

விவரம் வேண்டுமா? சரி! ஒருநாள் ஒருஜெமீனில்நடந்தது, கீழேபொறித்திருப்பது. பாருங்கள்!]

(1)

இடம் :—ஜெமீன் வீடு.

இருப்பவர் :—ஜெமீன்தார், வேலையாள்.

"எலே! எடுடா, கோட்டு, மாட்டுடா பூட்சு! மடப்பய, மடப்பயடா! கால் என்னடா இரும்பா? கடாமாட்டுடன்பழகுபவன்தானேடா, நீ, கன்ட்ரீ, ப்ரூட்!"

(2)

இடம் :—கூடத்தில்.

இருப்பவர் :—ஜெமீனில் காரியஸ்தராக உள்ளஐயர். கூட்டம் ஏற்பாடு செய்தவர்.

"சாமி! ஐயாவிடம் நீங்க காலையிலே கவனப்படுத்தவில்லையோ? லேட்டாகுது. எட்டு மணிக்கே டெப்டி வருவதாகச் சொன்னார். மணி இப்ப ஒன்பது ஆகுது."

"ஆமாம்! உங்களுக்கு டிப்டி வருகிறான் அங்கே. நம்மடிப்டி நமக்கு இப்பதானே தரிசனம் தந்தாரு. நான் என்னத்தைச் செய்ய."

"ஏன், இவ்வளவு லேட் ஆகுது. உடுப்பு போட, இவ்வளவு நேரமா?"

"ஏன் ஆகாது? பூட்ஸ்போடத் தெரிந்தாத்தானே! துரைபோல இருக்கவேண்டும் என்று ஆசை. பழக்கமும் கிடையாது, துரைபோல உடுப்புபோட்டு. போடாமப் போகவும் இஷ்டமில்லை. அதனாலேதான்........"

"ரொம்ப லேட்டாவுது"

"ஆமாம் உள்ளே போர் நடந்துண்டு இருக்கும் இன்னேரம்."

"சண்டையா? ஏன்? யாரு கூட"

"அடடே! மனுஷாளோடு அல்லப்பா. பூட்சுக்கும், ஜெமின்தாரவாள் காலுக்கும் போர் நடந்துண்டிருக்கும்னு சொன்னேன்."

(3)

இடம் :—சமயலறை.

இருப்பவர் :—தவசுப் பிள்ளைகள்.

"டே! தம்பு! காப்பியை ஆற்றினயா?"

"இல்லையே, ஐயா சூடாகேட்பாரே."

"இன்னக்கி, காப்பியை ஆற்றிக்கொண்டு வரச் சொன்னாரேடா"

"சொன்னார். ஆனா, நாம் ஆற்றி எடுத்துக்கொண்டு போனா, தடியா! ரொம்ப ஜில்லுன்னு போச்சேனனு ஏசுவாரே."

"சரிடா! ஒரு கப் காப்பி சூடாகவே எடுத்துக்கொ. ஒரு கப் காப்பி, ஆற்றிஎடுத்துக்கோ. எது பிரியமோ அதைச் சாப்பிடட்டும். மிச்சம், உன் வாயிலே ஊத்திக்கோ."

"எனக்கேம்பா! நான் காலையிலேயே, ரெண்டுக்கோ சாப்பிட்டாச்சி"

(4)

இடம் :—ஜெமீன் வீதியில்.

இருப்பவர் :—வண்டிக்காரன் பண்ணை வேலையாள்.

"கருப்பா! பில்லையைக் கட்டலாமா, செவலையைக்கட்டுவமா?"

"பில்லையைத்தானே, காலையிலே கட்ற வழக்கம்."

"ஆமாம், ஆனா, தொரை கிரை வருகிறப்பொ, செவிலி மாடு கட்டினுத்தான், மதிப்பா இருக்கும்னு சொல்லுவாரே."

"அதுவும் சரிதான்."

"என்னத்தைச் சரி. இப்ப நான் எந்த மாடு கட்டுவேன்"

"உனக்கேண்டா அந்த விசாரம். போய், ஐயரைக் கேள்டா"

(5)

இடம் :—தெருக்கோடி.

இருப்பவர் :—ஏழை மாது. ஜெமீன் எடுபிடி.

"ஏம்மா, இது யாரு வீடு?"

"ஏன், என் வீடுதான்"

"என்னம்மா இது, கொஞ்சம் கூட மட்டு மரியாதெஇல்லாமெ தெருவிலே, மாடும் கன்னும் கட்டி வைச்சிருக்கெ........"

"அடெ, என்னப்பா இது. என் வீட்டு எதிரே, என் மாடு கட்டி வைச்சா, தப்பா? யாரை மரியாதெக் குறைவாக நடத்தினேன்?"

"அட யாரம்மா இது, சுத்த வம்புக்காரியா இருக்கே. ஜெமின்தாரய்யா வண்டி வரப் போவுது, இப்ப. வருகிறப்போ, தடையா மாடு கட்டியிருக்கே. கண்டாரானா, என்ன சொல்வாரு?"

"தப்புத்தாம்பா! இதோ, அவிழ்த்து புழக்கடைக்குத் தாத்தி விடறென், ஜெமீன்ஐயா, வண்டி வரப்போவது தெரியாமப் போச்சி"

"சுருக்கா. சீக்கிரம் ஆவட்டும்மா. டே! முனியா! வழியிலே எதாச்சும், கல்லு கில்லு கிடக்குதான்னு, பாத்து அப்புறப்படுத்துடா, ஐயா வண்டி வரப்போவுது. அம்மா! கொஞ்சம், கூட்டிடு சுத்தமா! சாணி இருந்தா ஈ மொய்க்கும். ஐயா கண்ணிலெ அசங்கியம் பட்டுதானா, காலங்காத்தாலே, வாந்தி வந்துவிடும்."

(6)

இடம் :—தமிழ்வாத்யார்வீடு.

இருப்பவர் :—வாத்தியார். மாணவன்.

"டே! பாட்டு சரியாப் பாடம் செய்தாச்சா? என் மானத்தைக் காப்பாத்துங்கோடா!"

"பாடம் ஆயிட்டுது சார். ஒப்பிக்கட்டுமா சார்"

"பாடித் தொலையடா"

"வாழ்க, வாழ்க, வாழ்ந்திடவே
வரமருள் தேவா, துணை நபா
எங்கள்குலத்துமணிவிளக்கே
ஏழைதுயரம் துடைப்பவரே
ராஜகுடும்ப பூஜிதரே
ரகுபதிராகவன் அடியவரே."

"டே! நிறுத்துடா. கடைசி அடி என்ன? இன்னொருதடவை பாடு."

"ரகுபதிராகவன் அடியவரே".

'அடியவரே ஊஹூம்கூடாது'

"அப்படித்தான்சார், எழுதிக் கொடுத்திங்க."

"ஆமாண்டா மண்டு, அது எனக்குத் தெரியாதோ. அடியவர் என்று சொன்னா, ஒரு வேளை ஜெமீன்தாருக்குக் கோபம் வரும்—யார்யா, அடியவன், வேலைக்காரப்பயன்னு தானே அர்த்தம். என்னை திமிருடான்னு, கர்ஜிப்பாரு."

"ஏன் சார், நீங்க சொல்லிங்களே, சிங்கம்தான் கர்ஜிக்கும்னு"

"சீ! பேசாமெக்கிட, அடியவர்னு பாடாதேடா, ரகுபதிராகவன்திருமகனேன்னுபாடுடா"

"ரகுபதிராகவன் திருமகனே! திருமகனே! ரகுபதிராகவன்திருமகனே!"

"டேய், டேய், நிறுத்து, நிறுத்தித்தொலைடா, திருமகனே வேண்டாம்டா, வேண்டாம்டா' டே! வாத்யாரே, என்ன நெஞ்சழுத்தமா என்னைப் போய் எங்கப்பன் பிள்ளைன்னு சொல்லாமே, எவன் பிள்ளைன்னோ சொல்றே? உன்னை என்னபண்றேன் பாருடான்னு முறைப்பான்."

"வேறே எப்படிப் பாட? முன்னே பாடினதேபாடுவமா?"

வேண்டாய்டா, இரண்டும் சரியில்லை. அருள்பெறுவாய்னு பாடுடா."

"ரகுபதிராகவன் அருள்
பெறுவாய்—ரகுபதிராகவன்
அருள் பெறுவாய்— அருள்
பெறுவாய்"

"பரவாயில்லெடா! இது சரியா இருக்கு. சொல்லு: ரகுபதிராகவன் அருள் பெறுவாய்."

(7)

இடம் :— கோபுரவாசற்படி

இருப்பவர் :—கூட்டம்: ஜெமீன் மானேஜர்:- ஊரார்.

"டே! டெப்ட்டி, எந்த விநாடியும் வந்துடுவாரு. ஏண்டா, தடியனுட்டமா, நிற்கிறே. வந்து உட்காரச்சொல்லேண்டா, அவனுங்களே. டே! முனிசிப் எங்கேடா. கூப்பிடுடா! அப்பா, சோணாசலம்! உனக்கு இந்தக் கோட்டுதானா கிடைச்சுது, கை, இவ்வளவு மேலுக்குப் போயிட்டிருக்கே. சிரிக்காதே! கொஞ்சமாவது மட்டுமரியாதே இருந்தா, ஒருபெரிய ஆபீசர் வருகிறார் நம்மஊர் ஜெமீன்தாரும் வருகிறார், இப்படிப்பட்ட சமயத்திலேயா, இந்தக்கோட்டைப் போடுவது என்று எண்ணிட வேண்டாமோ. என்ன எண்ணுவார், டிப்ட்டி. சரி, ஜெமீன்தார் வர்ர நேரமாகுது, இந்த வாத்தியாரைப்பாரேன், வரவே இல்லெ. ரொம்பத்தலை கிறக்கு ஆசாமிக்கு. காலையிலே வந்து இருக்கவேணுமேல்லோ. ஐயா! கோட்டு! போய், அந்த வாத்யாரை இழுத்துகிட்டு வாய்யா. தனியாப்போகமுடியாதா? சரி, தணிகை, போய்வாப்பா கூட"

8

இடம்:— பாதை

இருப்போர்:— ஜெமீன்குடிகள்.

"காரியஸ்தரு ரொம்பக் கோவமா இருக்காரே."

"இருப்பாரு. ஜெமீன்தாருவர்ரப்பொ, இந்தமாதிரி கோட்டா போடுவதுன்னு, கேட்டாரேல்லோ. இவரு இப்படிச் சொல்கிறாரு. ஒருநாளு நான் இந்த மாதிரிச் சமயத்திலே ஒரு நல்ல பட்டுக்கோட்டு, நம்ம மருமவன்து, அதைப்போட்டு கிட்

(2-ம் பக்கம் பார்க்க)

# அன்புடைமைக்கு அளவுகோல்

(நக்கீரன்)

"அன்புஞ்சிவமும் இரண்
டென்பார் அறிவுடையார்,
அன்பே சிவம் என்பார்
அறிவிலார்,
அன்பே சிவம் எனும்அறி
யாமை நீங்கின்,
அன்பே சிவம் என்று
அழுது திரியார்,"

இந்தப்பாடலை எனது நண்பர் ஒருவர் கொண்டுவந்து என்னிடம் தந்து, நீர், இனி, எழுத இருக்கும் சம்பந்தர் வரலாற்றின் தொடர்ச்சியாகவரும் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்யும் என்று கூறிவிட்டுப் போய்விட்டார். நான் இந்தப் பாடலைப் படித்துப் பார்த்தவுடன், எனக்குத் திருமூலரின் நினைவுதான் வந்தது. திருமூலரால் பாடப்பெற்ற திருமந்திரம் என்னும் நூலில் உள்ள மூவாயிரம்பாடல்களில் இதுவும் ஒன்று என்று எண்ணி உடனே திருமந்திரம் என்னும் நூலை எடுத்துப் புரட்டிப்பார்த்தேன், பழையநினைவு—இப்படி ஒரு பாடல் திருமந்திரத்தில் இருந்ததாக. எனவே, ஒரு முறைக்கு இருமுறை—பல முறை பார்த்தேன், இந்தப் பாடல் என் கண்களுக்குப்படவில்லை. 'மீண்டும் ஒரு முறை, ஒவ்வொரு பாடலாகப் படித்துக் கொண்டே சென்றேன்—கிடைக்கவில்லை! உடனே எனக்கொரு நினைவு வந்தது. அதாவது, "எழுத்தெண்ணிப் படித்தவனுக்கு நான்—அப்படிப்பட்ட என்னிடமா உன்னுடைய புலமையைக் காட்டுவது?" என்று சில புலவர்கள் கூறுவார்களே, அந்த முறையையாவது கையாண்டு பார்ப்போம் என்றெண்ணி, மேலும் ஒரு தடவை, ஒவ்வொரு பாட்லாக, எழுத்தெண்ணிப் படித்துக் கொண்டே சென்றேன். என்ன அற்புதம்!

'அன்பும் சிவமும் இரண்
டென்பார்"

என்ற சொற்றொடர் திருமந்திரம் என்னும் நூலில் இருக்கக் கண்டேன். மேலும் படிப்பதை நிறுத்தி, எழுத்தெண்ணிப்படிக்க வேண்டுமென்று புலவர்பெருமக்கள் கூறுவது இதற்குத்தான் போலும் என்று எண்ணி இறும்பூதெய்தினேன். இவ்விதம்படிப்பதே முறை என்று கூறிய புலவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக என்று, அவர்கள் நேரில் இல்லாததால் எனது உள்ளத்தால் அவர்களுக்கு அந்நன்றியைச் செலுத்திவிட்டு, மேலும், அந்தப்பாடலை எழுத்தெண்ணிப் படித்துக் கொண்டே சென்றேன்—திகைத்தேன்! 'அன்பும் சிவமும் இரண்டென்பார்' என்பதற்குப் பக்கத்தில் இருந்த சொற்றொடர், எனது நண்பர் தந்த பாடலில் இருப்பது போலில்லாமல் வேறு விதமாக இருந்தது. கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு மறுபடியும் ஒரு முறை, எழுத்துக்களை எல்லாம் ஒவ்வொன்றாக உச்சரித்தும் எண்ணியும் படித்துப் பார்த்தேன். ஒருகால், நான் படித்த திருமந்திரம் என்னும் நூல் அச்சுப் பிழையாக இருந்திருக்கலாம் என்றெண்ணி அச்சுப்பிழை—எழுத்துப்பிழை எதுவும் இல்லாத ஆறுமுக நாவலர் பதிப்பாக உள்ள திருமந்திரம் ஒன்றைத் தேடிப்பெற்றுப், படித்துப் பார்த்தேன். அதிலும் என் நண்பர் தந்த பாடலில் உள்ளபடி இல்லாமல், மாறுபட்டே இருந்தது. இதனைப் பார்த்தவுடன், எனது நண்பர் வேண்டுமென்றே எனக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்றெண்ணி இப்படிச் செய்து விட்டாரோ என்றுகூட நினைக்க வேண்டியதாயிற்று. ஒன்றுக்கொன்று சிறிதளவும் பொருத்தமில்லாத அத்தனை முரண்பாடுகள் அந்த இரண்டு பாடலுக்கும் இடையே இருந்தன. திருமூலர் திருமந்திரத்தில் காணப்படும் பாடல்,

"அன்பும் சிவமும் இரண்
டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது
யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது
யாரும் அறிந்தபின்
அன்பேசிவமாய்
அமர்ந்திருப்பாரே"

என்று அச்சிடப்பட்டிருந்தது. எனவே, இந்தப் பாடலுக்கும் எனது நண்பர் தந்த பாடலுக்குமுள்ள கருத்து வேறுபாடு, மலைக்கும் மடுவுக்கும்உள்ளது போன்றிருக்கிறதே! "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" என்று திருமூலரும், "அன்பும் சிவமும் இரணடென்பார் அறிவுடையார்" என்று எனது நண்பரும் கூறியுள்ளனரே! அன்பையும் சிவத்தையும் இரண்டாகப் பிரித்து, அன்புக்கும் சிவத்திற்கும் தொடர்பில்லை என்று கூறுபவர்கள் அறிவில்லாதவர்கள் என்று திருமூலர் கூறியதை மாற்றி; அப்படிப் பிரிப்பவர்களே அறிவுடையவர்கள் என்று எனது நண்பர் கூறி, அந்தப்பாடலை என்னிடம் தந்து, "நீர், இனி எழுதவிருக்கும் சம்பந்தர் வரலாற்றின் தொடர்ச்சியாகவரும் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்யும்" என்று கூறிப் போனதன் கருத்தெதுவாய் இருக்கலாம்? நான், இனிச்சம்பந்தரைப்பற்றி ஆராயப்போகும் நிகழ்ச்சி எது? என்பனவற்றை எண்ணிப் பார்த்த போதுதான், எனது நண்பர் அந்தப்பாடலை அமைத்துத் தந்ததின் நோக்கம் எது என்பது தெரிந்தது.

எனவே, சம்பந்தர் வரலாற்றின் தொடர்ச்சியாகவுள்ள ஆராய்ச்சி, அவர் சமணர்களைக் கழுவேற்றியபகுதியாகும். அதாவது, சம்பந்தருக்கும் சமணர்களுக்கும் இடையே, அவ்விருசாராருடையவும் சமயங்களின உயர்வு தாழ்வுப் போட்டிக்காக நடத்தப்பட்ட பந்தயத்தில், தோற்றவர்களைக் கழுவேற்றுவது என்ற திட்டத்தின்படி சமணர்கள், அந்தப் பந்தயத்தில் தோற்றுவிட்டனர் என்றுசெய்யப்பட்ட தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு அவர்களைக் கழுவில் ஏற்றியதாகும். இனி, இந்தத் தீர்ப்பு யாரால் கூறப்பட்டது? சமணர்களுக்கும் சைவர்களுக்கும் பொதுவாக—அந்தப் பந்தயத்தில் ஈடுபடாத நடுவர் (பஞ்சாயத்தார்) யாராலாவது? என்பனவற்றுக்குப் புராணத்தில் ஆதாரம் எதுவும் இல்லை; என்றபோதிலும், சமணர்களே இந்த முடிவுக்கு வந்ததாகச் சேக்கிழார் கூறியுள்ளார். அதாவது,

"....................
தங்கள் வாய் சோர்ந்து
தாமே 'தனிவாதில் அழிந்
தோமாகில்,வெங்கழுவேற்
றுவான் இவ்வேந்தனே'
என்று சொன்னார்"

என்பது. இதன் பொருள், சமணர்கள் வாய்தவறி, 'நாங்கள் தோற்றோமாயின் எங்களை இம்மன்னன் கழுவில் ஏற்றுவானாக' என்று சொன்னார்கள் என்பதாகும். எனவே, சேக்கிழார் கூற்றுப்படி, சமணர்களே இந்த முடிவுக்கு வந்ததாக வைத்துக்கொள்வோம். ஆனால், அன்பென்றால் சிவம்; சிவம்என்றால் அன்பு என்பதை உணர்ந்து அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, அவ்வழியிற் சிறிதும் தவறாது 'செல்லும சம்பந்தரும் அவர்வழிச் செல்வோரும், மனதினாலும் எண்ண முடியாத இக்கொடுமை நிகழ்வதற்கு இடம்அளித்திருக்கலாமா என்பதை எண்ணிப் பார்க்கும் போதுதான், எனது நண்பர் தந்த பாடலிலுள்ள கருத்தமைப்பின் உண்மையும், திருமந்திரத்திலுள்ள பாடலின் பொய்ம்மையும் நன்கு புலனாவதாயிற்று.

திருமூலர் கூற்றுப்படி, அன்பும் சிவமும் ஒன்று—அவ்விரண்டையும் பிரிக்க முடியாது—அப்படிப் பிரித்துக் காண்பவர்கள் அறிவிலிகள் என்பது உண்மையானால், அன்பிற்கு உறைவிடமாகப் பேசப்படும் சைவசமயத்தை மேற்கொண்டு, அதனை நாடெங்கும் பரப்பவந்த சம்பந்தர், அன்பென்பது அணுவளவும் அற்ற அற்பனும் செய்வதற்கு அஞ்சும் கொடுமையைச் செய்திருக்கலாமா? இங்ஙனம் செய்வதை அன்பையும் சிவத்தையும் ஒன்றாகக் காணும் சைவத்தை மேற்கொண்ட சம்பந்தர், சமணர்கள், அன்பு—ஈவு—இரக்கம் எதுவுமில்லாத குலச்சிறையால் கழுவேற்றப் படுவதற்கு இசைந்திருக்கலாமா? "குலச்சிறையாரே! பொறும். அவர்கள் ஏதோ அறியாமையாலும் அவசரத்தாலும் அப்படிச்சொல்லிவிட்டார்கள். ஆனால் நாம் அவர்கள் சொன்னபடி, அவர்களைக் கழுவில் ஏற்றுவது முறையாகாது—அங்ஙனஞ்செய்வது, அன்பும் சிவமும் ஒன்று என்ற நமது 'உண்மை'க் கோட்பாட்டினை நாமே தகர்த்தெறிவதாக முடியும். ஆகையால், நீர் இந்தக் கொடுமையைச் செய்தல் வேண்டாம்" என்றுகூறித் தடுத்திருக்கவேண்டாமா?

இனி, ஒருகால், 'சம்பந்தரோ, குலச்சிறையோ அன்றிப்பாண்டியனோ இந்தக் கொடுமையைச் செய்யவில்லை; சமணர்கள் தோற்றவுடன், தாங்களாகவே சென்று கழுமரங்களில் ஏறிக்கொண்டனர். ஆகையால், சம்பந்தராலோ அன்றி வேறெச் சைவபெரியன்பர்கள் பாலோ இக்குற்றத்தை ஏற்றமுடியாது', என்பதாகச் சிலர் கூறக்கூடும். ஆனால், அங்ஙனம் கூறித் தப்பித்துக்கொள்வதற்கும் சேக்கிழார் இடந்தரவில்லையே!

"இவர்களைக் கழுவேறச்
செய்க"

என்று பாண்டியன் கூறியதாகவும்,

"குலச்சிறையார் கழுமரங்
களை நாட்டினர்"

என்பதாகவுமன்றோ சேக்கிழார் கூறியுள்ளார். இவைமட்டுமல்ல, குலச்சிறையே சமணர்களை வலிந்து கழுவில் ஏற்றினர் என்பதற்கு எண்ணற்றசான்றுகள் புராணத்திலேயே உள்ளன.

"பண்புடை அமைச்சரு
ம்...........நீண்ட கழுத்
திரையில் ஏற்ற, நண்புடை
ஞானம் உண்டார் மடத்
தத் தீநாடி இட்ட, எண்
பெருங்குன்றத் தெண்ணா
யிரவரும் ஏறினர்கள்"

என்று சேக்கிழார் கூறியுள்ளார். அதாவது, ஞானப்பால் உண்ட திருஞான சம்பந்தர்வீற்றிருந்த மடத்துக்கு நெருப்பிட்ட எண்ணாயிரம் சமணர்களையும், அவர்களைக் கொல்வதற்கென்று வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த கழுமரங்களில், குலச்சிறை நாயனார் ஏற்ற, ஏறினார்கள் என்பது இப்பாடலின் பொருளாகும்.

"............அமணைக்கழுவின்
மேல், இருந்தமிழ் நாட்
டிடை ஏற்று வித்தோன்"

என்பது, குலச்சிறையைப்பற்றித், திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார்நம்பி கூறியிருக்கும் உண்மை.

"............வாதில் தோற்ற
கையரை வைகைக், கரை
சேர் கழுவில் ஏற்று [illegible]
ணர்"

என்பது, குலச்சிறையைப் பற்றித், திருத்தொண்டர்புராணசாரத்தில் கூறப்படும் உண்மை. எனவே, இவ்வுண்மைகளால், சமணர்கள், தாங்களாகவே கழுமரங்களில் ஏறித் தற்கொலை செய்து கொண்டனர் என்று எவரும் கூறமுன்வாரார்.

(8-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

நடத்திண்டு வருகிறு? அது அதிர்ஷ்டம் தானே. வந்த நாளிலே இருந்து மோட்டார் ஓடினதில்லே. டிரைவர் மட்டும் நீ இருக்கறே!"

"ஐயரே! மோட்டாரைரிப்பேர் செய்திண்டுதான் இருக்கறேன். வேலே செய்யாமே ஒண்ணும் சம்பளத்தை அள்ளிக் கொடுக்கலெ. தெரியுதா?"

"ஆமாம்! வேலே செய்துண்டுதான் இருக்கே. யாரு இல்லேன்னு. ஓ! வா! சிவப்பி,சௌக்யமோ?"

"சௌக்யந்தான், கரப்பு ஐயரே! எதுவோ காகிதம் இருக்காமே அதைக் கொடு. நீபோயி அந்தக் கூட்டத்திலே இருக்க வேணுமாம். ஐயா, பின்னேடு வருவாராம்."

"இதோ, ஜாக்ரதையாகொடு. வாட்டுமோ. சந்திரா! வந்திறேண்டாப்பா."

"என்ன ஐயரே! கார் எப்ப ஓடும்னு சொல்லாமலே போறிங்க. ஒரு ஆருடம் பாருங்க"

"வேடிக்கைக்காரண்டா நீ? இல்லாமலா, ரங்க விலாசிலே அம்முனு மாப்பிள்ளை மாதிரியா உலாவிண்டிருக்கே. அதிர்ஷ்டம் டா, அதிர்ஷ்டம்."

"சரி, போங்க—உங்கலயத்து வலிக்கு நான் என்ன செய்யறது."

16

இடம் :—கோபுர வாசற்படி.

இருப்போர் :—கூட்டம், மானேஜர்.

"டே! நாயனம் எங்கே? ஊதடா! சும்மாவே இருந்தா கூட்டம் குறைந்து விடுமே."

"இதோ, உத்திரவு. டே! எங்கெடா, தவுல்காரன்........டே..... தருமா? என்னடா, தொல்லே. எங்கேடா அதுக்குள்ளே போயிட்டே—ஆகட்டும் சீக்கிரம்—தம்பி! டே செருக்குச் சரியா இருக்கா பார்த்துக்கோ—'ராமநன்னு' ஆரம்பிக்கணும்."

17

இடம் :—டேப்ட்டி வீடு.

இருப்போர் :—கல்வி அதிகாரி, ப்யூன்.

'சொல்லேண்டா, போய் ஐயா, அரை மணி நேரமா டிரஸ் பண்ணிண்டு காத்திண்டிருக்கா—வண்டி வரவில்லே—கோபமாகக்கூட இருக்கார்னு சொல்லேண்டா, மடயன்.'

ஜெமீன்தாரிடமா சொல்வது?'

'அவன் ஆத்துக்காரியிடம் போய்ச் சொல்லு—அசடு—அசடு—அவரண்டெ போய்ச் சொல்லவேணுமா இந்த பிரமாதத்தை. எவனுவது இருக்கமாட்டா [illegible] காரியஸ்தன்—எல்லாப் [illegible] குட்டை [illegible] மாட்டிக்கொண்டு கூடியிருப்பாங்களடா கோபுரவாசற்படியிலே—அங்கே போய் எந்தத் தடியனிடமாவது சொல்லு [illegible] யா! நீ உருப்பட மாட்டேடா. நமக்கு இந்த மாதிரி ப்யூன் வந்து வாய்த்தானே ஈஸ்வரா!"

"கோவிக்காதிங்க—சலங்கெ சத்தம் கேட்குது—வண்டிதான் வருது."

'போய்ப் பார்த்துத் தொலே. யாரு வண்டின்னு பாரு.

(18)

இடம் :—வண்டிக்குள்.

இருப்போர் :—ஜெமீன்தார், வண்டிக்காரன்.

"டே, கரியா! அதோ தெரியுதே. அதுதானே டிப்ட்டி தங்கி இருக்கிற இடம்"

"ஆமாங்க"

"என்னடா சொல்லித் தொலேக்கறே, உரக்கச்சொல்லு."

'ஆமாங்க."

"தெருவிலே பந்தல் இருக்கே..."

'ஆமாங்க............"

"ஓ! அந்த வீடா! டே, கரியா! முன்னே, போனவருஷம் திருவிழாவுக்கு ஒரு நாட்டியக்காரி வந்திருந்தாளே, அதே வீடல்லவா இது."

"ஆமாங்க............"

"அந்த அம்மா இறங்கியிருந்த வீடு தானுங்க.'

'யார்டா அவன், வண்டியைமடக்கறவன்—என்ன திமிருடா அவனுக்கு...............'

'டிப்ட்டி வீடு............"

"எவன்வீட்டு ஆளா இருந்தா என்னடா? வீசுடா சவுக்காலே, போடு. ராஸ்கல். யார் வண்டியிலே வருவநன்னு கூடக் கவனிக்காமே வழி மறிக்கிறன். முட்டாள்! அடி விழுந்தாத்தானே தெரியுது. ராஸ்கல்! போடா விலகி! ஆகட்டும் உன்னை மரத்திலே கட்டித்தோலே உரித்து விடச்சொல்றேன்..........என்னடா உளறினன், பய.'

"டிப்ட்டிபார்க்கச்சொன்னருன்னு சொல்றனுங்க."

"இப்படித்தான் பார்க்கச் சொன்னு—நடுப்பாதையிலே வண்டியை மடக்கி. இதுபோல'தம்பு' தட்டினத்தான் பயல்களுக்குப் புத்திவரும். ஓட்டு வண்டியை. பய,உன்னேபோய், டிப்ட்டிகிட்டச்சொல்லி அழுவான்"

"ஆமாங்க..............அவருக்குக் கோவமாகூட இருக்கும்ங்க"

"இருக்கட்டுமே. இந்த முப்பது வருஷமா, நம்ம வண்டியைவழியிலே எவனும் கைகாட்டிநிறுத்தினதில்லே. ஏன், பய, வண்டிபின்னேடுஓடிவந்து என்ன விஷயம்னு சொல்லப் படாதோ............"

"ஆமாங்க..............."

இடம்:— டிப்ட்டி வீடு

இருப்போர்:— டிப்ட்டி. வேலேயாள்.

"அன்யாயம்! அக்ரமம்! ஒருபாவமும் செய்யாதவனுக்கு இந்தக்கதியாகுது..............."

"என்னடா அழறே! டே! என்னடா இது சொல்லித்தொலேடா?"

"என்னத்தைச் சொல்ல? சவுக்காலே அடிச்சிப்போட்டான்......"

"உன்னேயா?—யாரு........."

"யாரு? ஜெமீன்தாரன் வீட்டுவண்டிக்காரன்"

"ஏன்"

"ஜெமீன்தாரன் அடிக்கச்சொல்லி உத்தரவு போட்டான். இல்லேயானு, பாவம், அவன் ஏன் என்னே அடிக்கப் போறன்.',

"ஜெமீன்தாரர் ஏன் அடிக்கச் சொன்னரு?"

"அவனுங்க செய்யறதுக்கு காரணம்கூட இருக்கா? வண்டியைக் கண்டதும், கை காட்டினேன், நிறுத்தச் சொல்லி, அதே வண்டியிலேயே, ஜெமீன்தாரன்கூட நீங்களும் போயிடலாமேன்னு. கைகாட்டினதும்,அடி விழுந்தது."

"முரட்டுத்தனம். இந்த மாதிரிப் பயல்களெல்லாம், காட்டு ராஜா போல் இங்கு அதிகாரம் செய்துண்டு இருக்கிறார்கள். அவனுக்கு நன்னு தெரியும், நீ, என் ப்யூன் என்கிற விஷயம்......'

"முதல் அடி விழுந்ததும் கும்பிட்டுக்கிட்டுச் சொன்னேனுங்களே, டிப்ட்டி டிப்ட்டின்னு."

"அதைச்சொல்லியும்...?"

'அடி நின்னுதா?டிப்ட்டியும்மம்ட்டியும்! விலகுடான்னு' அந்த வண்டிக்காரன்சவுக்கை வீசிக்கிட்டுதான் இருந்தான்.'

'போக்கிரிப்பய போலிருக்கு அந்த வண்டிக்காரன்."

"அவன் பாவம், அம்புதானுங்களே என்னேப்போல அவன் ஒரு ஏழை—ஊழியக்காரன்—ஜெமீன்தாரன் சொன்னபடி கேட்டாகணுமே.'

'டே! இது, உன்னேமட்டும்அடித்ததுன்னு அர்த்தமில்லே—என்னேயும் அவமானப்படுத்தினதாகத்தான் அர்த்தம். இப்படிப்பட்டவன் சகவாசமே கூடாது ஆமாம்—மீட்டிங்குக்குநான் போகப் போறதில்லே. அவமானப் பட்டேம் பய.''

20

இடம் :—கோபுர வாசல்.

இருப்போர் :—கூட்டம். மானேஜர். ஊரார்.

'வழிவிடு — விலகுடா, டேய் — ஒதுங்கு—டே! ஜே சொல்லுங்கடா, ஜே ஜேன்னு கூவுங்க—ஜெமீன்தாரு வருகிறாரு—கூவுங்களேண்டா—ஆகட்டும்—உரத்து—சத்தமா—'

இப்படி இப்படி கிறந்துங்கோ—சேவிச்சிக்கரேங்க—இதோ, சோபாவிலே உட்காருங்க...இப்படி..."

'என்னடா இது, ஒரே சத்தம்—இரைச்சல்'

'ஜனங்க உங்களேப் பார்த்த சந்தோஷத்தாலே...'

'இந்தக் கூச்சலுக்குப் பேர் சந்தோஷமா? அடக்குடா! அறிவுகெட்ட தனமாப் பேசதே. கப்சிப்னு இருக்கச் சொல்லு வரிசையா உட்காரச் சொல். சரி, எங்கே, டிப்ட்டி?'

'வரக்காணேமுங்க'

'தேடிப்பாரேன், தோட்டம் தொரவிலே! மடையனுக! எண்டா ஒரு ஆள் அவனேப்போய் அழைச்சிகிட்டு வரக்கூடாதோ.'

'போகிறேனுங்க. நம்ம வண்டியை ......'

'அழைச்சிகிட்டுப் போ.'

(21)

இடம் :—பாதை.

இருப்போர் :—வண்டி ஓட்டி, ஜெமீன்குடி.

'ஏனுங்க, உங்களுக்கு வண்டி ஓட்டத் தெரியுமுங்களா? மரியாதையில்லாமெ கேட்கறேனுன்னு எண்ணிக்க வேணு முங்க. ஒரு காரியமாத்தான் கேட்கறேன்.'

'எம்பா! கேட்டா என்ன தப்பு? நான் என்ன வேத்துச் சீமைக்காரனு! வண்டி ஓட்டத் தெரியாமா என்ன? ஓட்டுவேன்.'

'எதுக்குன்னு, டிப்ட்டி வீட்டு வேலேயாளே நான் ரெண்டு தட்டு தட்டிவிட்டேன். அதனுலே, இப்ப நான் அங்கே போனு, அவன் எதாச்சும் செய்வான். அதனுலே...'

'எண்டாப்பா அவனே அடிச்சே?'

'நான் என்ன செய்யறதுங்க. ஜெமீன்தாரய்யா அடிக்கச் சொன்னரு'

'ஏன்?'

'சரியாப் போச்சு போங்க. அய்யா செய்யற ஆயிரம் காரியத்துக்கும் காரணம் என்ன இருக்குங்க.'

'பாவம்! அவனும் ஏழை; நீயும் ஏழை. ஏழையை ஏழை என் போட்டு அடிக்கோணும்?'

'ஏழைக, கதி இப்படி இருக்கு.'

'சரி. நீ இங்கே இரு, நான் வண்டியை ஓட்டிக்கிட்டுப் போகிறேன்.'

(22)

இடம் :—பாதை.

இருப்போர் :—வண்டி ஓட்டும் ஜெமீன்குடி. வழியில் வருவோர்.

'அடெ! எது, ஜெமீன்தாரய்யா வண்டியை இவரு ஓட்டிக்கிட்டுப் போருரு. ரொம்பச் சினேகம் போலிருக்கு ஜெமீன்தாரய்யாவுக்கு.'

'ஏ! பட்டிக்காட்டுப்பயனு,சரியா இருக்கே. வண்டி வர்ரப்போ, வழியிலேகிற்கறயே. ஒதுங்கு. இதுஎன்ன, இலேசுப்பட்ட மாடுகளா, இழுத்தும் நின்றவிட ஜெமீனிலே நல்லாத் தின்னு கொழுத்துக் கிடக்கு.'

(23)

இடம் :—டிப்டி வீடு.

இருப்போர் :—டிப்டி.வேலேயாள்.

'வண்டியா, வருது.'

'ஆமாங்க'

'கோட்டு, எடு. டே! சீக்கிரம்.'

'என்னங்க இது. கூட்டத்துக்குப் போகமாட்டேனுன்னு சொன்னிங்களே?'

'சொன்னேன். என்ன செய்வது ஜெமீன்தாரனே விரோதிச்சிண்டா, நல்லதில்லே பாரு. சமந்து ஏன் வீண் தொல்லே. கொஞ்சகாலத்துக்கு இந்தப் பக்கம். பிறகு வேறே ஜில்லா போயிடணும். இந்த ஜெமீன்தாரனுங்க இருக்கற பக்கமே, வேலேக்கு இருக்கப்படாது. யாரது? வாங்கய்யா வாங்க. வண்டியா?

'ஆமாங்க! ஐயா, அழைச்சிகிட்டு வரச்சொன்னரு.'

'அந்தக் கொரங்கு எங்கே? என் ப்யூனேப் போட்டு அடிச்சு விட்டான்ய்யா அந்த வண்டிக்காரன்.'

'கேள்விப்பட்டேனுங்க. ஜெமீன்தாரய்யா, அவனே, உடனேவேலேயை விட்டு நீக்கிவிட்டாருங்க. அதனுலேத்தான் நான் வண்டியை ஓட்டிகிட்டு வந்தேன்.

டே! 'பார்டா, ஜெமீன்தாரவாளுடைய, குணுதிசயத்தை. இல்லேயானு இலட்சுமி அவரிடம் கொஞ்சி விளையாடிண்டிருப்பாளா?

'என்னய்யா இது? எது உனக்கு ரொம்பவாய்க் கொழுப்புத்தான் போலிருக்கு.'

'என்னப்பா இது? நான் என்ன சொன்னேன்னு...'

'என்ன சொன்னயா? எவ்வளவு திமிரு இருந்தா...'

'அடெ, இது என்னடா கர்மம். நான் என்னடா, சொன்...'

'சும்மா கிடய்யாபோதும். ஊரிலே எவனெவனே, போக்கத்ததுங்க பேசறது போலவே நீயும் பேசிவிட்டே. பார், நீ படப்போகிற பாட்டை. உன் ப்யூனுக்குக் கிடைச்சதே பூஜை, அதுபோல இராது உனக்கு விழப் போவது...'

'அடெ, அடெ! என்னப்பா இது? கொஞ்சம் நிதானிப்பா. என்னடா இது...'

'லெட்சுமி,கொஞ்சுறளாம் இவரு பக்கத்திலே இருந்து பார்த்தவரு. வாய் அழுகிப்போகும் உனக்கு பார், இப்பவே, போய், ஜெமீன்தார் கிட்டச் சொல்லி...'

'டே! என்னடா இது, வெறி பிடித்த மாதிரி பேசிவிட்டு, வண்டியையும் திருப்பி ஓட்டிவிட்டுப்போயிட்டான். நான் என்ன சொன்னேன், ஏன் இவன் இப்படி தொந்தரிச்சான்.

'நீங்க, எதுக்காகங்க, வம்பு பேச்சு எடுத்திங்க. அவனுக்கு அவமானமாத்

தானே இருக்கும்?

'என்னடா கர்மம்! உனக்கும் வெறியா? நான் என்னடா சொன்னேன், இவனுக்கு அவமானமோ, கோபமோ வருகிறது போல.

'என்ன போங்க நானுந்தானே கேட்டுகிட்டு இருந்தேன் ஜெமீனு களிலே, இதுமாதிரி விஷயம் ஆயிரம் நடக்குதுங்க. யார் எப்படியானு நமக்கென்னுனுதானே போகவேணும். அவரு இலட்சுமிகூட ஆடிக்கிட்டு கிடந்தா உங்களுக்கு என்ன? இலட்சுமி, புருஷனுச்சே இப்ப வந்தவன். அவன் எதிரிலேயே வா சொல்வது நீங்க.

'என்ன, என்ன? என்னடா இது விபரீதம். நான் சொன்னதற்கு, விபரீதமாக அர்த்தம் செய்துண்டதாகத் தெரியறதே.

'விபரீதம் என்ன இருக்குங்க. நீங்க நல்லா, வெள்ளையாத்தானே சொன்னிங்க; ஜெமீன்தார் ரொம்ப நல்ல குணமுடையவராக இருக்கிறதாலே தான் இலட்சுமி அவரிடம் கொஞ்சி விளையாடறுன்னு.

'ஆமா அதிலே என்ன தப்பு?

'மறுபடியும் அதே போலப் பேசறிங்களே. போங்கய்யா, ஜெமீனுகளிலே இருக்கிற போக்குத் தெரியாமேப் பேசறிங்க. ஜெமீன்தாரன் எவன் வீட்டுப் பொம்பளைகூடக் கட்டிப் புரண்டா உனக்கு என்னய்யா? இலட்சுமி புருஷனிடமே நீங்க சொல்றிங்க, ஜெமீன்தாருடன் லட்சுமி கொஞ்சி விளையாடறுன்னு.

'அட இழவே! அடெ! நான்சொன்னது, வேறு. விபரீதமாயிடுத்தே. நான், ஜெமீன்தாருடன் இலட்சுமி கொஞ்சி விளையாடுகிறுன்னு சொன்னது, அவர் நல்ல சம்பத்துடன், ஸ்ரீ மகாலட்சுமி கடாட்சம் பெற்றிருக்கிறார் என்கிற அர்த்தத்திலே சொன்னேன். நேக்கு, வேறு ஒரு லட்சுமி விஷயமும் தெரியாதே...

'அப்ப,- நீங்க, இப்ப வந்து போனானே, அவன் பெண்ஜாதி லட்சுமி விஷயமா அல்லவா சொன்னது ......

'இல்லேப்பா. நான் துடுக்குத்தனமாக எதுவும் சொல்லவே மாட்டேனே மேலும் எனக்கு, இந்த இலட்சுமி சங்கதியேதெரியாது. நான், சாதாரணமாக நல்ல செல்வத்துடன் சுகமாக இருக்கிறவாளை, இலட்சுமி அவனிடம் கொஞ்சி விளையாடுகிறுன்னு லோகத்திலே சொல்வா; அதுபோலச் சொன்னேன்.

'அட எழவே. நானே கூடச் சந்தேகப்பட்டேன் நீங்க குறும்பாகத்தான் பேசறிங்கன்னு. என்ன,இங்கே கிராமம் பூரா இதே பேச்சு. இப்ப வந்து போனானே இவனுக்கு ஜெமீன்தாரேத்தான் கிட்ட இருந்து கலியாணம் செய்து வைத்தாரு. அந்தக் குட்டி ரொம்பக் கைகாரி போலிருக்கு. ஜெமீன்தாரரையே கைக்குள்ளேபோட்டுகிட்டா. ஊரெல்லாம் புகாரு. ஜெமீன்தார் லட்சுமியை— அவபேரு அது—...அப்படி இப்படின்னு. அவ புருஷன் எதிரிலேயே நீங்க ஜெமீன்தாரு லட்சுமியுடன் கொஞ்சிகிட்டு இருக்கிறுருன்னு சொல்லவே........

ஆமாம் நான் என்னத்துக்காகச் சொன்னேன்கிறது தெரியாமே தன் விஷயமாத்தான் நான் பேசினதாக எண்ணிகிட்டு.............

"இன்னேரம், ஜெமீன்தார்கிட்ட கலகமூட்டிவிட்டிருப்பானே..."

"நான் என்னத்தைச் செய்யற தப்பா இதுக்கு? கூட்டத்துக்குப் போய், அவனைக்கண்டு......"

"வாங்க........."

(24)

இடம்:— பாதை

இருப்போர்:- தம்பல்:- டிப்டி:- வேலையாள்:-

"நல்லடிப்டி! டிப்டியாம். டிப்டி! ஜெமீன் தாருக்குச் சரியானகோபம்."

'இருக்காதா? அவரைவரச் சொல்லிவிட்டு, ஜனங்களையும் காத்திருக்கச் சொல்லிவிட்டு......"

"இவன் 'தண்ணி' யைப்போட்டுகிட்டு உருள்கிறுனும்...! எவ்வளவு கெர்வம், பார்த்தயா?,'

வேலை நிலைக்குமா என்ன இவனுக்கு. ஜெமீன்தாரய்யா ஒரு கடுதாசி போட்டா, வேலைபோயிடும்.

'டே! அதோ ஓடி வருகிறுன் பாரு, டெப்டி.'

'தெளிந்துபோலிருக்கு.'

'அப்பா! நீங்களெல்லாம்...'

'நாங்களெல்லாம், மனுஷனுங்க தான். என்யா இன்னம் சரியாதெளியலே போலிருக்கு டிப்டிக்கு...'

'என்னப்பா இது, என்னென்னமோ, பேசறிங்க. அடெ! யேலேயே விழுறது மாதிரியா வர்ரீர்களே. என்னய்யா இது...மனுஷாளா நீங்களெல்லாம்...'

"நாங்க ஒண்ணும் போதையிலே இல்லெ, உன்னுட்டம்.'

'யாரு போதையிலேஇருக்கா. யாரிடம் பேசரேம்னு எண்ணிண்டுஉளறிண்டு இருக்கேள்.'

'டிப்டின்னு தெரியுது. உன்யோக்யதையைத்தான், இப்ப உனக்கு வண்டி ஓட்டிகிட்டு வந்தாரே அவர் வெளிப்படுத்தினுரே, ஜெமீன்தாரரிடம்'

'அடபாபி! என்ன சொன்னான் என்னைப்பத்தி.?'

'மதுரைவீரன் பூஜையிலே இருத்திறதா.'

'என்னப்பா சொல்றேன்?'

'புரியல்லையோ. என்ன யோக்யதைய்யாஉனக்கு. ஜெமீன்தாரு வந்து காத்துகிட்டு இருக்காரு உனக்காக. கூட்டம், 'ஜேஜே'ன்னு இருக்கு. நீ குடித்துவிட்டு புரள்ரயே வீட்டிலே. யோக்யனுட்டம் பேசவந்துவிட்டே'

'பாபிகளே! நாக்கு புழுத்துவிடும் அபாண்டம் பேசின. நானு குடித்துவிட்டுக் கூத்தாடுகிறவன். என்னையா அப்படிச் சொன்னேள்? பார், உங்களை, ஜெமீன்தாரவாளிடம்சொல்லி ......'

'ஜெமீன்தாரிடம் சொல்றயா? போய்யா, போ. அவர்தானே. உன் யோக்யதையை எங்களிடம் சொன்னவரு. சொல்லிவிட்டுத்தான், கூட்டம் இன்று இல்லே, எல்லாம் வீட்டுக்குப் போங்கடான்னுரு. நாங்களும் போரேும். டிப்டியாம், டிப்டி!'

'டெ! அந்தக் குடிகாரப்பயகிட்ட என்னப்பா பேச்சு. வீட்டுக்குப்போனதும் ஜெமீன்தார், பேனுவேலையை ஆரம்பிக்கும், இவரு அப்பறம் மம்டிதான், வா, வா. போவோம்'

'ஐயோ! என்ன விபரீத ராஜ்யம்பா இது.'

இவ்வளவுதானே நீங்க, கண்டது! ஜெமீன் ராஜ்யத்திலே; வேண விசேஷமுண்டுங்க. இங்கே ஐயா,இட்டது தான் சட்டம். ஐயா, எதையும், ஒரு ஐயர் இருக்கிறுரு வீட்லே, அவரைக்கேட்டுக் கொண்டுதான் செய்வார். டேய்!போய்த்திரையடா அவன் குடிசைக்கு—ஜெமீன்தார சொல்ல வேண்டியது — நீதெரியும்! மாடு கண்ணை மடக்கி இங்கே ஓட்டிக்கிட்டுவா; வந்துவிடும். மரத்தை எல்லாம் வெட்டிக்கிழேசாய்டா. — தீர்ந்தது. எண்டா, அவயார் மகன்னு கேட்டா போதும், அந்தப்பெண்ணை பலாத்காரமாத் தூக்கிட்டுவந்து விடுவாங்க. எவ்வளவோ நடக்குது போங்க அக்ரமம். யாரு இருக்காங்க கேட்க.

தெய்வம்கூடவா கேட்காது?

நல்லாச் சொன்னிங்க, போங்க. ஜெமீன்தாருதானே, கோயிலுக்கு மான்யம் கொடுத்திருக்காரு. நீங்க சொல்றிங்களே தெய்வம்கூடவாகேட்காதன்னு, உங்க ஜாதியாரிலே யாரோ ஒரு பெரியகுருவாமே. சங்கராச்சாரின்னு அவரு போனவருஷம் வந்தாருங்க. என்ன சொன்னார்தெரியுங்களா? ஜெமீன்தாருக்கு பகவத் கடாட்சம் பரிபூரணமாக இருப்பதாகச் சொன்னார். ஜெமீன்தாராளிடம், விரோதமாக இருப்பவரை பகவான் நரகத்திலேகூடத் தள்ளுவாராம். புண்யவான்களுக்குத்தான், ஜெமீன்கிடைக்குதாம். இன்னம், என்னென்னமோ சொன்னுரு போங்க. அவர் வந்து போறதுக்குமுந்தி, ஜெமீன் தாரிடம், ஊரார் பேசப் போனுமேல் வேட்டியை இடுப்பிலே கட்டிகிட்டு மட்டுந்தான் இருக்கற வழக்கம். சங்கராச்சாரியாரு வந்து போனபிறகு, ஜெமீன் தாரிடம் போறவங்க, முதலிலே கீழேவிழுந்துக்கும்பிட வேணுமுங்க.

சரி. வீட்டுக்குப் போகலாம், வா.

நல்லவேலை! இன்னராத்திரி வீட்டிலே, தங்க முடியுங்களா?

ஏன்?

ஜெமீன்தார் கோவத்திலே இருக்காரு. அந்தக்கோபத்தாலே கல்லுமழையல்லவாபொழியும் வீட்டுமேலே!

அப்படியா?

ஆமாம் இன்னராத்திரி பக்கத்து ஊர்லே தானுங்கபடுக் கோணும்.

பக்கத்து ஊர்லே, எங்கேன்னு போய்ப்படுக்கறது

என்னுங்கஇது! நீங்கடிப்டி.எந்தப் பள்ளிக்கூடத்திலேயும் போய்த் தங்கலாம். வாங்க இப்படியே நடந்து மனமளன்னு போயிடுவோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

காங்கிரஸ் ஆட்சியினர் கோபம் கொள்ளும் அளவுக்கு, சட்டத்தைப்புரட்டிப் புரட்டிப்பார்க்குமளவுக்கு, சாதாரணச் சட்டம் போதாமல், அவசரச்சட்டம் போடும் அளவுக்கு! இந்த விசித்திரத்துக்கு ஒரு விளக்கம் இல்லையா! கண்டுபிடிக்க ஏன் காங்கிரசார் முயலக்கூடாது?

முதலமைச்சர், சட்டசபையிலே முழக்கமிடுகிறார், 'சர்க்கார் பலாத்காரச் செயலை அனுமதிக்காது; அடக்கியேதீரும்' என்று. உண்மை. அவசியம். மறுப்பார் இல்லை. பலாத்காரச் செயல் புரிவோர்மீது வழக்குத் தொடர நீதிமன்றங்கள் உள்ளனவே! அவசரச்சட்டம் ஏன்? பிரதமர் பிரகாசம் இன்று என்னென்ன காரணம் காட்டுகிறாரோ, அவசரச்சட்டத்தின் அவசியத்துக்காக, இதேவிதமான காரணத்தைத்தான் ஏறாளபத்யம் முன்பு எடுத்துக்காட்டிற்று— காட்டினபோது கண்டித்தனர் காங்கிரசார். இத்தகைய அவசரச்சட்டங்கள் பிறப்பிக்கும் ஆட்சிமுறையை ஒழிப்போம் என்று கர்ஜித்தார் ஆந்திரகேசரி. இன்று அவரே, சட்டசபையிலே, 'நிலைமை கட்டுக்குஅடக்கவில்லை; பலாத்காரம் மிகுந்துவிட்டது' எனவே அவசரச்சட்டம் பிறப்பித்தேன் என்றுபேசுகிறார். இது நாம், ஏற்கனவே கேட்ட பாடம்! வழக்கமானபதில்! ஆள்வதற்குப் பயிற்சி பெறும்போது இந்தப் பாலபாடமே போதிக்கப்படுகிறது. காஷ்மீர்மன்னர், ஷேக் அப்துல்லாவைத் தண்டித்தபோது இதேபாடத்தைத்தான் படித்தார்! அதேமன்னர், பண்டிதநேருமீது தடைஉத்திரவு போட்டபோதும் இதே பாடந்தான் படித்தார்! இதே போக்குதான் என்னுடையதும் என்கிறாரா முதலமைச்சர்? அங்ஙனமாயின் அவரால் முடிந்ததை அவர் செய்கிறார் என்று கூறுவதன்றி வேறென்ன இருக்கிறது!

★

## பெரியார் அறிக்கைவரும்

பெரியார், தூத்துக்குடி சென்றபோது 144-ம்! வேறுசில இடங்களிலும் இது போலிருக்கிற காரணத்தால், என்ன செய்வதென்று,தோழர் திருச்சி வேதாச்சலம் அவர்களுடன் கலந்தாலோசித்தார் என்று தெரிய வருகிறது. விரைவில் நாட்டு நிலைமை பற்றியும் கட்சியின் வேலைத் திட்டத்தைப்பற்றியும் எதிர்கால ஏற்பாடுகள் பற்றியும் பெரியார் தமது கருத்துரையைக்கட்சியினருக்கு அளிக்க இருக்கிறார் என்றும் அறிகிறோம். அவருடைய அறிக்கையை மிக்க ஆவலுடன் கட்சியினர் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.




1-ம் பக்கத் தொடர்ச்சி

நல்ல வேளை நழுவ லானார்!
ஓசை யின்றி ஒளிந்து நின்றவள்
வந்தாள், நின்றாள், வழியைப் பார்த்தாள்!
தொலைவில் வருபவர் தையல ரிருவர்!
பார்த்துவிட் டாரோ?எனப் பதைத்தாள்! துடித்தாள்."

*  *  *  *

"அவள்பின் வாங்கி அசைவு செய்யாது
மறைவிற் சென்றாள், மாதரும் வந்தார்!
விரைவில் குளத்தை விட்டு நீங்காது
தாமதம் செய்ததால் துடித்தவள் நின்றாள்!

*  *  *  *

ஒருவழி யாக அவர்கதை முடித்துச்
சாலை சேர்ந்து செல்ல லாயினர்!

*  *  *  *

"சுப்பியும் தண்ணீர் சீக்கிரம் மொண்டு
விரைந்தாள்! விரைந்தாள்! விரைந்தாள்! பறந்தாள்!
புதையல் கண்டது போல, மகிழ்ச்சி!

*  *  *  *

வீடு சென்று புகுந்தாள்! அந்தோ!
கணவனைக் கண்டதும கவலை கொண்டாள்!
சிறுகுடம் நழுவித் தரையில் விழுந்தது!
'[illegible]' அலறிக் கோதை வீழ்ந்தாள்!
குப்பன் என்றும் கலையாத
துயிலில் மூழ்கித் தூங்கி யிருந்தான்!

—ப. உ. [illegible]

வெற்றிகரமான இரண்டாவது பதிப்பு
**வெளியாகிவிட்டது!**
வருங்காலத் திராவிட ஐக்கிய குடியரசின் முரசொலி!
**சி. என். அண்ணாத்துரை** அவர்களின்
மதிப்புரையுடன்கூடியது
**திராவிடமும்—ஆரியமும்**
என்ற இரத்தினச் சுருக்கமான நூல் விலை அணா 5.
வியாபாரிகளுக்கு கமிஷன் உண்டு. தனிப்பிரதி வேண்டுவோர் ஆறணா ஸ்டாம்பு அனுப்பவும்.
**"திராவிட கலாநிலையம்"**
55, முக்தாருன்னிஸாபேகம் தெரு, மவுண்ட்ரோடு, சென்னை.

15—2—47 அன்று வெளிவருகிறது
**"பொன்னி"**
கவியரசர் பாரதிதாசன், C. N. அண்ணாத்துரை, M. A., முதலிய தமிழ் நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் எழுதுகின்றனர்.

| | தனிப்பிரதி | ஆண்டுக்கட்டணம் |
|---|---|---|
| உள்நாடு, இலங்கை | 0—8—0 | 6—0—0 |
| மலேயா, பர்மா | 0—10—0 | 7—8—0 |

**ஏஜண்டுகள் தேவை**
"பொன்னி" அலுவலகம், புதுக்கோட்டை.

வானமும் புவியும் அனைத்தையும்
படைத்த
மட்டிலாச் சருவவல்லபத்தின்
மகத்துவதேவன் செகத்தினிலினர்
வருத்தமேனியில் இருப்பானோ?
தான தாயிருந்தோன்
ஒருவனோஇரண்டோ
சாற்றுவீர் சாத்திரிமாரே!

**வேதநாயகம்.**

5-ம் பக்கத் தொடர்ச்சி

இனிச், சமணர்கள் தாங்களாகவே கழுமரங்களில் ஏறினர் என்பதற்குச் சேக்கிழார் கூறும் காரணம், வலிந்து பொருத்திப் பொருள் கொண்டாலும் கற்பனைவுபோல் பொருந்தா முறையிலேயே அமைந்துள்ளது. எப்படியென்றால், சமணர்கள், தாங்கள் தோற்றால் கழுவேறுவதாகக் கூறியது உள்ளும்புறமும் ஒத்த உடன்பாட்டோடு கூறப்பட்டதல்ல வென்பதும், வாய் தவறியே அச்சொற்கள் சமணர்களால் கூறப்பட்டன வென்பதும் சேக்கிழார் கூறுவதினின்றும் அறியப்படும் உண்மையாகும். எனவே, வேண்டுமென்று கூறப்படாமல், வாய் தவறிக் கூறப்பட்ட சொற்களை ஆதாரமாக வைத்து, அவற்றிற்குரிய நடவடிக்கைகளை எடுத்து ஒரு காரியத்திற்கு முடிவு செய்வதென்பது, வழியில் வறிதே சென்று கொண்டிருக்கும் ஒருவனுடைய மடியில் ஏதாவது ஒரு பொருளை வைத்து, அதனை அவன் திருடினான் என்று அவன் மீது குற்றஞ் சாட்டித் தண்டிப்பது எந்த அளவு அற்பத்தனமும் வஞ்சக மனப்பான்மையும் கொண்ட கொடியவர்களால் செய்யப்படும் காரியமோ, அது போன்றதே வாய் தவறுதலால் ஏற்பட்ட ஒன்றை ஆதாரமாக வைத்து ஒரு காரியத்தைச் செய்வதும்.

மக்கள் அனைவராலுமே வெறுக்கப்படும் கொடுங்கோல் ஆட்சியில்கூட வாய் தவறிச்சொல்லப்படும் சொற்களுக்கும், கைதவறிச் செய்யப்படும் செயல்களுக்கும் மன்னிப்புக் கிடைப்பதுண்டு. ஆனால், அன்பையே அரணாகக் கொண்டு ஆக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சைவ சமய ஆட்சியில் 'நின்றால் குத்து —இருந்தால் உதை' என்ற முறையிலேயே காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்ஙனம் செய்வதுதான் நெறியா? முறையா? அறமா? அன்புடைமையா? என்று கேட்பது குற்றமா? அன்புடைமை என்ற சொல்லுக்கு அருகாமையில்கூட நிற்க முடியாதவர்கள்—தகுதியற்றவர்கள் அன்பே சிவம் என்று அரற்றித் திரிவதை அறிவுடைய மக்கள் ஒருபோதும் உண்மையெனக் கொள்ளவே மாட்டார். உண்மையான அன்புடைமை பிறவிப்பகைமையைக் கூடத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல்பெற்றது. மக்கட்பண்பிலே, அன்பால் பிணைக்கப்பட முடியாத ஒன்று அவனியில் இருக்கவே முடியாது. கற்பிளவோடொத்த கயவரன்றிப், பொற்பிளவோ டொத்த புனிதர், எதனையும் எவரையும் அன்பால் பிணைத்துவிடுவர். ஆனால், சைவ சமயத்தில் பேசப்படும் அன்புடைமை பிறரைத் துன்புறுத்துவதற்கே பயன்படக் காண்கின்றோம். சமணர்கள், சைவத்தை வெறுத்தார்கள்—சிவனை இகழ்ந்தார்கள். அங்ஙனம் செய்தது தவறு என்று அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் சைவர்கள் கருதினால், தங்களுடைய அன்புடைமையை அளவுகோலாகக் கொண்டு, சமணர்கள் செய்த தவறை அவர்களே உணரும்படி செய்திருக்கவேண்டும். அல்லது சைவத்தையும் சிவனையும் பிறர் வெறுத்தும் இகழ்ந்தும் பேச முடியாதபடியாவது அவரறை அமைத்திருக்க வேண்டும். இவ்விரண்டில் ஒன்றையேனும் செய்யமுடியாத நிலையிலுள்ள சைவர்கள் அன்புடைமை பற்றிப் பேசுவது அழகல்ல—அறமுமல்ல. ஒன்றைக் குற்றமுடையதாகவே அமைத்துவிட்டு, அக்குற்றத்தை எடுத்துக் காட்டுபவர்கள்மீது சீறி விழுந்து அவர்களைத் துன்புறுத்துவதுதான் அன்புடைமையென்றால், அத்தகைய அன்புடைமையை அவனி ஒருபோதும் வரவேற்காது

இனி, ஒருகால், சைவத்தினிடத்தும் சிவனிடத்தும குற்றம் எதுவுமே இல்லை; சிலர் வேண்டுமென்றே குற்றம் சுமத்துகிறார்கள் என்றால், அத்தகைய குற்றமற்ற தன்மையையாவது விளக்கிக் காட்டவேண்டும். அல்லது, அறவே குற்றமற்றதாகக் கொள்ளக்கூடிய எதுவுமே உலகில் இருக்கமுடியாது —எதிலும் குற்றமும் குணமும் கூட்டுச் சரக்காகவே அமைந்திருக்கும்; குற்றத்தை விட்டுக் குணத்தையே கொள்ளவேண்டுமென்றாவது கூறவேண்டும். இதுவும் செய்யமுடியவில்லை யென்றால், தம்மீது குற்றம் சுமத்துபவர்கள்மீது தாமும் குற்றம் சுமத்தாமலாவது இருக்கவேண்டும். அங்ஙனமன்ற, "அவன் கிடக்கிறான் குடிகாரன், எனக்குப் போடு பூப்போட்ட கோப்பையில் இரண்டு" என்பதுபோல், சமணர்கள் சைவத்தைத் திட்டியதற்குப் பதிலாகச், சமணர்களையும் அவர்கள் சமயத்தையும் வட்டியும் முதலுமாகச் சேர்த்துத் திட்டுவது எந்த அன்புடைமையின்பாற் பட்டதோ நாமறியோம். சம்பந்தரால் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றும் சமணர்களைத் திட்டுவதற்கென்றே பாடப்பட்டவை என்று பொருள்கொள்ளும் முறையில் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். தடியர்—மடையர்—வஞ்சகர்— குண்டர் —புலையர்—மானமற்றவர் என்பனபோன்ற நூற்றுக்கணக்கான இழி சொற்களால் சமணர்களைச் சம்பந்தப் பெருந்தகையார் வரம்பு கடந்து வைதிருக்கிறார். இந்த நிலையில் அன்பே சிவம் என்பதற்கு யாதாயினும் பொருளோதொடர்போ இருக்க முடியுமா என்றுஎண்ணிப்பார்ப்பவர்கட்கு, அன்பும் சிவமும் ஒன்றல்ல—ஒன்றென்போர் அறிவிலார் என்பதும், அன்பும் சிவமும் வேறு வேறு—இரண்டும் ஓரிடத்தில் ஒன்றாக இருக்கமுடியாதென்று கூறுவோர் அறிவுடையார்என்பதும் புலப்படும்.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.